எங்கள் தோழர்களின் புதை குழியில்
மண் போட்டுச் செல்கின்றோம்
இவர்கள் சிந்திய குருதி தமிழ்
ஈழம் மீட்பது உறுதி

எங்கள் தோழர்களின் புதை குழியில்

இளமை நாளில் கனவை எல்லாம்
எருவாய் மண்ணில் புதைத்தவர்கள்
போர்க்களம் படைத்து தமிழ் இனத்தின்
கருத்தில் நெருப்பை விதைத்தவர்கள்

எங்கள் தோழர்களின் புதை குழியில்

வாழும் நாளில் எங்கள் தோழர்
வாழ்ந்த வாழ்வை நினைக்கின்றோம் எம்
தோழர் நினைவில் மீண்டும் தோளில்
துப்பாக்கிகளை அணைக்கின்றோம்

எங்கள் தோழர்களின் புதை குழியில்

தாவிப்பாயும் புலிகள் நாங்கள்
சாவைக்கண்டு பறப்போமா
பூவாய்ப் பிஞ்சாய் உதிரும் புலிகள்
போன வழியில் மறப்போமா

எங்கள் தோழர்களின் புதை குழியில்